# Summaries in Tamil

**தரம் சார் மற்றும் எண்ணிக்கை சார் ஆராய்ச்சி முறைகளை இணைத்து, சிக்கலான அவசர கால நிலைமைகளில் உளசமூக, மற்றும் மனநலத் திட்டங்களுக்கு உதவியளித்தல்: விசேட பதிப்புப் பற்றிய அறிமுகம்**

இந்த விசேட பதிப்பானது மன நலம் மற்றும் உளசமூக உதவித் துறையில் பிரயோக ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அழிவு மற்றும் சிக்கலான அவரகால நிலையில் ஆராய்ச்சி செய்வது இத் துறையின் பெரிய சவாலாக இருப்பதால் இதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. திட்ட வரைபு, திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டில் பிரயோக ஆராய்ச்சி எவ்வாறெல்லாம் உதவ முடியும் என்பதைக் காட்டுவதே நோக்கமாகும். திட்டங்களின் தரத்தைக் கூட்டுவதற்கென சேவை வழங்குவதுடன் தொடர்ச்சியாக ஆராய்ச்சியையும் இணைப்பதன் பொருத்தப்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் பற்றி சேவை வழங்குனருக்குத் தெரியப்படுத்துவதற்கு எத்தனிக்கின்றோம்.

---

**இலங்கை இளைஞர்கள் மத்தியில் அன்றாட மனவழுத்தத்திற்கான காரணிகள்: யுத்தம் மற்றும் இயற்கை அழிவுகளின்போது மதிப்பிடுதலிற்கான கலப்பு செயன்முறை அணுகுமுறை**

இலங்கையில் பிள்ளைகளுக்கான நாளாந்த மனவழுத்தக் காரணிகளுக்கான அளவுகோல் (CDSS) ஒன்றை உருவாக்குவதில் கலப்பு முறையைக் கையாண்ட விதத்தை இக் கட்டுரை விபரிக்கிறது. ஒருபுறம் அன்றாட மனவழுத்தக் காரணிகள், மறுபுறம் போர் மற்றும் இயற்கை அழிவுகளிற்கு முகம் கொடுத்தல் இளைஞர்களின் மனநலம் மற்றும் உளசமூக நன்னிலையில் ஏற்படுத்தும் தாக்கத்தின் ஒப்பீட்டளவிலான பங்களிப்பை இவ்வாய்வு மதிப்பிடுகின்றது. அன்றாட மனவழுத்தக் காரணிகள் புறக்கணிக்கப்படுவதை நாம் கலந்துரையாடுகின்றோம் - யுத்தம் மற்றும் இயற்கை அழிவுகளில் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மனநல மற்றும் உளசமூக தேவைகளை விளங்கிக்கொள்வதற்கும் அவற்றை தீர்ப்பதற்கும் நாம் முனையும் பொழுது அவர்களின் அன்றாட வாழ்க்கையின் மனவழுத்தக் காரணிகளை மதிப்பிடுவதும்ஈ யுத்தம் மற்றும் இயற்கையழிவுகளால் உருவாக்கப்பட்ட நிலைகளில் சமூகம் மற்றும் பொருள் சார் நெருக்க நிலைகளை விளங்கிக்கொள்வதும் முக்கியம். சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வகையில் கலப்பு செயன்முறையின் தனித்துவமான பெறுமதியினைப்பற்றி நடுநாயகமாக பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**முக்கிய சொற்பதங்கள்:** யுத்தம், அழிவு, அன்றாட மனவழுத்தக் காரணிகள், கலப்பு செயன்முறை, இலங்கை



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**மனஅழுத்தம், நன்னிலை மற்றும் யுத்தம்: வட-கிழக்கு இலங்கை குடிமக்களின் நேர்காணல்களின் தரம்சார் பகுப்பாய்வு**

அண்மையில் இலங்கையில் முடிவுற்ற சிவில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அகதிகள் மத்தியில் உபயோகிக்கவென, நன்னிலை மற்றும் கலாசார உணர்வு மிக்க யுத்தம் சார் அளவு கோல்களை (உளசமூக மற்றும் நடத்தைசார் பிச்சினைகள் அடங்கலாக) உருவாக்குவதற்கான முறையை வரையறுக்கின்றோம். இவ் அளவுகோல்களாவன, யுத்தப் பிரதேசத்தில் வாழும் தனிநபர்களிடமிருந்து சேகரித்த தரம் சார் தகவல்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டவை. பகுப்பாய்வு மற்றும் விடையம் சார் குறியீடிடல் என்பவற்றை சேர்த்து, ஓர் தரம்சார் தகவல் பகுப்பாய்வு முறையை பயன்படுத்தப்படு த்தியுள்ளோம். உபயோகித்த வினாக்கொத்துக்கள், அதிகம் குறியீடிடப்பட்ட விடையங்கள் என்பன இணைக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் (அளவுகோல்களை நியாயப்படுத்தல்) போன்றனவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்கள்::** கலாசாரத்தத்தெடுத்தல், வினாக்கொத்து, தரம்சார் தகவல் பகுப்பாய்வு, இலங்கை

---

**கருமா உணர்வு சார் நன்னிலை பற்றிய நேர்காணலின் மதிப்பீடு**

உளசமூக விடையங்களுக்கான இடையீடுகளின் வெற்றியானது உதவி தேவைப்படும் பகுதிகளை சிறப்பாகக் கண்டுபிடிப்பதிலும் இடையீடுகள் உண்மையில் உதவிபுரிகின்றனவா என்பதை அளவிடுவதிலுமே தங்கியிருக்கும். இக் கட்டுரையானது உள்நாட்டில் தரம் சார் மற்றும் எண்ணிக்கை சார் முறைகளைப் பயன்படுத்திய ஓர் உணர்வுசார் நன்நிலை மதிப்பீட்டை விபரிக்கிறது (KEWI). KEWI ஆனது நம்பகமானதும் தரமானதுமான ஓர் தரம்சார் முறையாக இருந்த போதிலும் சில சாவால்கள் காணப்பட்டன. இவ் ஆய்வு ஆனது பின்வரும் விடையங்களை வெளிக்காட்டியது- குறிப்பட்ட மக்களின் வாழ்க்கைக்குப் பொருத்தப்பாடுடைய விடையங்களை மையமாகக் கொண்ட ஓர் உளசமூக மதிப்பீட்டை செய்வதன் முக்கியத்துவம், மக்களின் வாழ்க்கை நிலையைக் கண்டுபடிக்கும் வழிகள். ஓர் மதிப்பீட்டுக் கருவியைத் திட்டமிடுவதிலும் உருவமைப்பதிலும் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமாகிறது. தவிர, திரட்டப்படும் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும், திருத்தமான தகவல்களைப் பெறுவது எப்படி என்ற முடிவுகள் எடுப்பதிலும் சமூகம் பங்களிக்க வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட மக்களின் கட்டுக்கோப்புகள் நம்பிக்கைகள் பற்றிய தெளிந்த அறிவு கருவியின் வடிவமைப்புக்கும் பெறப்படும் தகவல்களை விழங்கிக்கொள்வதற்கும் அவசியமாகிறது.

**முக்கிய சொற்கள்:** மதிப்பீடு, நன்னிலை, கலப்பு செயன்முறை, அகதிகள், கென்யா


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**யுத்தத்திற்கு பின்னான சூழலிலுள்ள இலுகுவில் பாதிப்படையக்கூடிய சமூகக்குழுக்கள்: நேபாலில் ஒரு கலப்பு- செயன்முறை கொள்கை பற்றிய ஆய்வு, சாதிப்பாகுபாடு மற்றும் உளவியல் நோய்கள் (Psychological morbidity) பற்றிய நோயின் தோற்றப்பாடு, பரவல் பற்றிய கற்கை (epidemiology)**

யுத்தத்திற்கு பின்னான நிலைகளில் உளசமூக திட்டங்களை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்டுத்தில் நிலைப்பாடுகள், பின்னணி, இலகுவில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் தேவைகள் பற்றியபரந்துபட்ட அறிவு தேவைப்படுகின்றது. இந்தக்கற்கையானது, இலகுவில் பாதிக்கப்படக்கூடிய நேபாலில் நிகழ்காலத்திலுள்ள சமூகப்பிரிவுகளை, குறிப்பாக சாதிசார் நிலைப்பாடுகளின் தோற்றப்பாடுகளை இனம்காணுவதற்கான வரலாற்று கொள்கை உரைகளின் ஆராய்வை பயன்படுத்துகின்றது. இந்தக்கொள்கை ஆய்வானது 316 மாதிரிகளில் (வயது வந்தோர்) இருந்து வந்த பிரிவு நிலை கண்டுபிடிப்புகளை மொழிபெயர்ப்பு செய்வதற்காக அமர்த்தப்பட்டுள்ளது. பகுப்பாய்வானது சாதிக்கும் உளவியல் நோய்களுக்குமான உறவை பரிசோதிக்கின்றது. இது பொதுவான சுகாதார வினாக்கொத்துடன் (GHQ12). குறைந்த சாதிக்குழுக்கள் மற்றய சாதி மற்றும் இனக்குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது உளவியல் நோய்களுக்கான கூடிய வாய்ப்புகள் உடையவர்களாக இருப்பது அறியப்பட்டது. வருமானம் மற்றும் நெருக்கப்பாடு கூடிய வாழ்க்கை சம்பவங்கள் என்பன சாதிக்கும் உளவியல் நோய்களுக்குமிடையிலான உறவை பகுதியாக தலையீடு செய்கின்றன. இந்த முடிவுகளின் பகுப்பாய்வுகள், சமூக தலையீடுகளில் உள்ள வரையறைகள், வளங்களை அடையக்கூடிய நிலை, சமூகக்கட்டுப்பாடு மற்றும் தண்டனை, பால் நிலை என்பன உள்ளடங்கிய கொள்கை ஆய்வின் அடிப்படையில் நடைபெற்றது.

**முக்கிய சொற்பதங்கள்:** கொள்கைப்பகுப்பாய்வு, கலப்பு செயன்முறைகள், சாதி, நேபால்

---

**பாகிஸ்தானில் NWF, 2005 மனிசெகிராவில் நடந்த பூமி அதிர்ச்சியின் பின் மனநல இடையீடுகளை வடிவமைப்பதற்கான கலப்பு – முறை களமட்ட ஆய்வு**

பூமிஅதிர்சியால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாகாணத்தில் (NWFP) மனநல சேவைகள் அடிப்படையில் பார்க்கும் பொழுது பாகிஸ்தானில் மிகவும் சேவைகள் குறைந்த பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. இந்தக்கட்டுரையானது NWFP பிரதேசத்தில் பூமிஅதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மன்செகிரா மாவட்டத்தில் மனநல இடையீடுகளை வடிவமைப்பதற்காக நடாத்தப்பட்ட கலப்பு- செயன்முறை களமட்ட ஆய்வுபற்றி விபரிக்கின்றது. இந்த ஆய்வின் முக்கிய குறிக்கோள்களாக



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

இருந்தவை, மனநல விடயங்கள் சம்மந்தமாக மேலதிகமாகவும் முழுமையானதுமான ஒர பூரண புரிந்துணர்வை பெறுதல், மற்றும் விடயங்களை முதன்மைப்படுத்தி தெரிவுசெய்தல், மற்றும் மனநல இடையீடுகளை வடிவமைத்தலுமாகும். எண்ணிக்கையடிப்படையிலும் தரஅடிப்படையிலுமான தரவுகள் திரட்டப்பட்டன. இரண்டு வகையான தரவுகளும் தனித்தனியாக பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வின் கடைசி விளைவில் இணைக்கப்பட்டன. இறுதி முடிவுகள், பூமி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனநலத்தின் தரத்தை உயர்த்த சமூகத் தொண்டர்களுக்கும் ஆரம்ப சுகாதார சேவையாளர்களுக்கும் மனநல சேவை பயிற்சிகள் வழங்குவதே மிகவும் கூடுதலாக முன்னுரிமைப்படுத்தப்பட்டது. ஆய்வானது பயிற்சிக்கான விடயங்களை, தலைப்புகளை தெரிவுசெய்ய தவியான இருந்தது.

**முக்கிய சொற்பதங்கள்::**
எண்ணிக்கை அடிப்படையிலான தரவு, தர அடிப்படையிலான தரவு, பாகிஸ்தான், மனநலம், பூமி அதிர்ச்சி


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.